எழுப்புதல் ஜெப ஐக்கியத்தின்

# ஐக்கிய மலர்

Volume No : 26 Issue No: 4 Bro.P.D.ஞானப்பிரகாசம் January - 2024

**ஆயுட்கால ஐக்கிய வாக்குத்தத்தம் :**

*சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்,*
*கர்த்தராகிய நான் ஏற்றகாலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன்.*


*ஏசாயா 60:22*

**2024-ம் வருட ஐக்கிய வாக்குத்தத்தம் :**

**“உங்களைப்பார்க்கிலும்**
**ஜனம் பெருத்த பலத்த ஜாதிகளை**
**நீங்கள் துரத்துவீர்கள்.”** உபாகமம் 11:23.

**“அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே**
**நேர்த்தியாகச் செய்திருக்கிறார்.”**

பிரசங்கி 3:11



அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

தனிப்பிரதி ரூ. 5.00
ஆண்டுச் சந்தா ரூ. 60.00

# ஜனவரி மாத வாக்குத்தத்தம் : 2024

**"என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்".** யோ.14:26

ஜனவரி மாத எச்சரிப்பின் வசனம்: **"நீ என்னை நேசிக்கிறாயா"** யோவான் 21:17

## உங்கள் சகோதரனிடமிருந்து...

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில், எழுப்புதல் ஜெபஐக்கிய ஊழியர்கள் மற்றும் தேவ பிரசன்னத்தை விரும்புகிற யாவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகளை கூறிக் கொள்கிறேன்.

இப்புதிய மாதத்திலும், தேவன் நம்மோடுகூடயிருந்து நமக்குத் தேவையான போதனைகளை வசனத்தின் மூலம் கொடுத்து, அதை மீண்டும் நினைப்பூட்டுவார். அப்போது நம்மில் வசன எழுப்புதலும், ஜெப எழுப்புதலும் இன்னும் அதிகமாக பெருக கர்த்தர் உதவிசெய்வார். கடந்த ஆண்டு முழுவதும் ஊழியங்களுக்காக ஜெபித்தீர்கள். இந்த ஆண்டும் இன்னும் அதிகமாக ஜெபிக்கவும், ஊழியத்தில் பங்கு பெறவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நாங்களும் உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்தின் ஆசீர்வாதங்களுக்காகவும் இன்னும் அதிகமாக ஜெபிக்க தீர்மானித்துள்ளோம். இம்மாதம் 15,16,17 திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் 34-வது குடும்பத்தியான முகாம் சுரண்டையில் நடைபெறும். இவைகளில் முழுமையாக கலந்து கொள்ள உங்களை அழைக்கின்றோம். நீங்களும் ஜெபத்துடன் பங்குபெற்று தேவாசீர்வாதம் பெற கேட்டுக் கொள்கிறோம். இம்மாதம் வழக்கமான ஊழியங்கள் யாவும் தடையில்லாமல் நடைபெறவும், நீங்களும் உங்கள் பகுதியில் ஊழியம் செய்யும்படியாக அன்புடன் கேட்கிறோம். இம்மாதம் 26ம் தேதி வெள்ளிக்கிழமை சுரண்டையில் உள்ள ஜெபக்கூடாரத்தில் வைத்து குடியரசு தின சிறப்பு ஜெபம் காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது. அதிலும் கலந்து கொள்ளுங்கள். இந்த ஆண்டு வரும் பாராளுமன்றத் தேர்தலுக்காக நாம் இன்னும் அதிகமாக ஜெபிக்க கடமைப்பட்டுள்ளோம். இயேசுவின் வருகைக்கு முன்பாக ஆண்டவர் தேசத்தலைவர்களை பாதுகாக்கவும், சந்திக்கவும் நாம் கருத்துடன் ஜெபிக்க வேண்டும். ஐக்கியத்தை இந்த ஆண்டு முழுவதும் தேவன் தலைமை தாங்கி வழிநடத்தவும், தேவன் தந்த ஊழியங்கள் யாவும் எல்லாரையும் கொண்டு கர்த்தர் நடத்தவும் ஜெபியுங்கள். ஊழியத்திற்கு எதிராக எழும்பும் ஆயுதங்கள் வாய்க்காமல் போக ஐக்கியத்திற்காக ஆவியில் நிறைந்து ஜெபியுங்கள்.

இன்னும் புதிய ஆத்துமாக்களை தேவன் தரவும், நம் ஐக்கியம் இன்னும் பக்குவப்படவும், ஆவியின் வரங்களோடு எப்பொழுதும் ஊழியம் செய்யவும் தேவன் கிருபை செய்ய ஜெபியுங்கள். இம்மாத ஊழிய பகிர்மான பகுதியில் ஐக்கியத்திற்கு கொடுத்த இவ்வருட வாக்குத்தத்தத்தை சொல்லி ஜெபியுங்கள். ரகசியமாக கர்த்தரை ஏற்றுக்கொண்டவர்கள் தைரியமாக சபை ஆராதனையிலும், ஊழியத்திலும் கலந்து கொள்ளும்படி அப்படிப்பட்டவர்களுக்கு விடுதலை கிடைக்க நாம் ஜெபிக்க வேண்டும். உலக முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஊழியங்களுக்காகவும், ஊழியர்களுக்காகவும் மட்டுமல்ல எல்லா சபை எழுப்புதலுக்காகவும் போராடி ஜெபிப்போம். நம்முடைய ஜெப ஐக்கியத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டு, அபிஷேகம் பண்ணப்பட்டு பல்வேறு இடங்களில் குடியிருக்கிறவர்கள் மேல் தேவன் தமது ஆவியைப் பலமாய் ஊற்றி அவர்களையும் வல்லமையாய் பயன்படுத்தவும், அவர்கள் ஐக்கியத்துடன் நல்ல தொடர்பு வைத்துக் கொள்ளவும் அதிகமாக ஜெபியுங்கள். தேவன் நம் கையில் தந்த ஐக்கிய ஊழியத்தை அவருடைய சித்தப்படி நடத்தவும் அதற்குரிய ஞானத்தையும், விவேகத்தையும் கட்டளையிடவும், இப்புதிய மாதமும், இப்புதிய வருடமும் ஆசீர்வாதமாக யாவருக்கும் இருக்க நாம் ஒருவருக்கொருவர் ஜெபித்துக் கொள்வோம். ஆவியானவர் சகலத்தையும் குறித்து நமக்கு போதித்து நடத்துவார். ஆமென்.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் இரவு 9.00 மணிக்கு google meet ல் இந்த link ல் https://meet.google.com/non-taah-nua ஜெபம் நடைபெறுகிறது.


கிறிஸ்துவின் பணியில்,
**P.துரைசிங் ஞானப்பிரகாசம்,**
ஆசிரியர், Cell: 90255 53614


வங்கி மூலம் காணிக்கை அனுப்புவோர், கீழ்க்கண்ட கணக்கு எண்ணில் அனுப்பி அதின் விபரத்தை ஐக்கியத்திற்கு தெரியப்படுத்துங்கள்.

STATE BANK A/c.No
Branch : Surandai
IFSC - SBIN0011065

Bro. **P.Duraisingh Gnanapragasam**
3 0 4 0 6 4 3 8 9 6 2

**Revival Prayer Fellowship Trust**
3 2 4 1 2 6 2 4 5 7 2

G pay
+919942950132


தொடர்புக்கு: சகோ. P.D.ஞானப்பிரகாசம் Cell: 90255 53614 | சகோதரி. S.சந்திரா ஞானப்பிரகாசம் Cell: 99653 36459 | சகோ. D.ஜோயல் Cell: 99429 50132

தேவ செய்தி

## "அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்" பிரசங்கி 3:11

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உங்களுக்கு புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதம் தேவ செய்தியாக, நம்முடைய ஆண்டவர் நமக்கு வேண்டிய சகல காரியங்களையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார் (பிரசங்கி 3:11) என்ற வார்த்தையை நாம் தியானிப்போம். நம்முடைய ஆண்டவர் நம்மையும், நம் குடும்பத்தையும், நாம் செய்து கொண்டிருக்கிற ஊழியத்தையும், இம் மாதத்திலும், இவ்வருடத்திலும் நேர்த்தியாய் நடத்தி இன்னும் நம்மை விசுவாச ஜீவியத்தில் சிறப்பாய் நடத்துவார். இந்த கிருபையுள்ள வார்த்தைக்கு நம்மை அர்ப்பணித்து நாம் ஜெபித்துக் கொண்டே இருக்க வேண்டும். சூழ்நிலைகள் வித்தியாசமாக இருந்தாலும், காரியசித்தியோ கர்த்தரால் நிச்சயமாய் வரும். வேதத்திலே அநேகருடைய வாழ்க்கையை வாசித்துப் பார்க்கும் போது அவரை நம்பினவர்களுக்கு நேர்த்தியான வழிநடத்துதலைச் செய்துள்ளார். அதிலுள்ள சிலரைக் குறித்து இச்செய்தியில் தியானிப்போம்.

### I தேவனால் நேர்த்தியாக நடத்தப்பட்ட யோசேப்பு [ஆதி.41:41]

யோசேப்பின் வாழ்க்கையை குறித்து ஆதியாகமம் 37வது அதிகாரம் முதல் 50வது அதிகாரம் வரை மிகத் தெளிவாக நாம் வாசித்துள்ளோம். அதில் காணப்பட்டுள்ள சத்தியம் என்னவென்றால் சரியான நேரத்தில் எகிப்து தேசம் முழுமைக்கும் அதிகாரியாக தேவனால் உயர்த்தப்பட்டார். இந்த உயர்வு எகிப்து தேசத்திற்கு மாத்திரமல்ல அவருடைய சொந்த குடும்பத்திற்கும் ஆசீர்வாதமாக இருந்தது. இதுபோல நம் ஒவ்வொருவரையும் தேவன் அதினதின் காலத்தில் நேர்த்தியாய் நடத்தப் போகிறார். ஒரு வேளை சோர்வோடு நீங்கள் காணப்பட்டாலும், இனி அவ்விதமாக இராதபடி தேவன் மேல் நம்பிக்கை வையுங்கள். உங்களை எப்படி நடத்தவேண்டும் என்று நம் ஆண்டவர் அறிவார். யோசேப்பு இவ்வாறு உயர்த்தப்பட்டதற்கு அநேக காரணங்கள் வேதத்திலே உண்டு. அதில் சில காரணங்களை தொடர்ந்து தியானிப்போம்.

முதலாவதாக, யோசேப்பைப் பற்றி பார்வோன் பேசும் போது தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப் போல வேறொருவர் உண்டோ? என்று ஆதி.41:38ல் வாசிக்கிறோம். ஒரு மனிதனுக்குள்ளாக பரிசுத்த ஆவியானவர் வரும்போது அம்மனிதன் தன் சுயமாய் வாழாமல் ஆவியினால் நடத்தப்படுகின்றான். எப்படி நடத்தவேண்டுமென்று ஆண்டவருக்குத் தெரியும். பல்வேறு பாடுகளை கடந்து வந்த யோசேப்பு, ராஜா கண்ட சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்ல தேவன் பயன்படுத்தினார். இந்த ஒரே காரியம் யோசேப்பு உயர்த்தப்பட்டதற்கு அடிப்படை சத்தியமாக அமைந்தது. இந்நாட்களில் நாம் அதிகமாக விரும்பி ஜெபிக்க வேண்டிய காரியம் பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகமேயாகும். பார்வோன் ராஜாவுக்கு அர்த்தம் சொல்லக்கூடியவர்கள் அநேகர் இருந்தாலும், அவர்களால் அந்த அர்த்தம் சொல்ல முடியாதபடி தேவன் யோசேப்பை தெரிந்து கொண்டு பயன்படுத்தினார். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்பது தேவன் நமக்கு அருளுகிற ஒரு பெரிய ஈவாகும். ஆவியானவர் உங்களை நடத்துகிறபடி நீங்கள் நடந்து கொள்ளுங்கள்.

தேவகிருபையால், வாலிப நாட்களிலே நான் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலையை அபிஷேகத்துடன் தேவன் தந்தார். அந்த அபிஷேகம் நடத்துகிறபடி நடந்து கொண்டதால் தேவ ஊழியத்தை ஆரம்பத்திலிருந்தே செய்யும் கிருபையைத் தேவன் தந்தார். அவ்விதமாக ஊழியம் செய்த நாட்களிலே எனக்கு வேறு எந்த ஒரு வருமானமும் கிடையாது. வருமானமே இல்லாவிட்டாலும் ஊழியம் செய்து கொண்டே இருப்பேன். அநேக சகோதர, சகோதரிகள் மூலமாக தேவன் போஷித்து வந்தார். ஏற்ற காலம் வரும் போது யோசேப்பை அதினதின் காலத்திலே உயர்த்திய ஆண்டவர் எனக்கு கிருபை செய்தார். அதன்படி 25-8-81 ஆம் ஆண்டு எனக்கு ஒரு ஆசிரியப் பணி செய்ய தேவன் வழிநடத்தினார். 30-12-81 அன்று என்னுடைய குடும்ப வாழ்க்கையை தமது சித்தப்படி எனக்குத் தந்து குடும்பமாக ஊழியம் செய்யவும் தேவன் உதவி செய்தார். 22-6-82 அன்று என்னுடைய மனைவிக்கும் ஆசிரியப் பணி செய்யும் கிருபையை கட்டளையிட்டு வேலையின் மத்தியிலும் கர்த்தருடைய ஊழியத்தையும் செய்ய தேவன் உதவி செய்தார். சில காலம் பணியில் இருக்கும்போதே 28-2-2007 அன்று விருப்ப ஓய்வு பெற்று தேவன் தந்த ஊழியத்தை இன்று வரை ஐக்கியத்தோடு இணைந்து முழுநேரமாக செயல்பட கர்த்தர் வழிநடத்தி வருகிறார். இந்த வழிநடத்துதல்கள் எல்லாம் பார்க்கும்போது தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு செய்யக்கூடிய அனைத்துக் காரியங்களையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாய்ச் செய்கிறார் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

அன்பானவர்களே, இந்த வார்த்தையின் மூலமாக தேவன் உங்களோடு பேசுகிறார். நடக்க வேண்டிய காரியங்கள் இன்னும் நடைபெறவில்லையே என்று கலங்க வேண்டாம். நாம் ஆராதிக்கிற தேவன் என்ன காரியங்களை எப்படி நடத்த வேண்டுமென்று தெளிவாய் அறிவார். அவர் மேல் உங்கள் பாரங்களை வைத்துவிட்டு பரிசுத்த ஆவிக்காக அதிகமாக ஜெபியுங்கள். அப்போது யோசேப்பை உயர்த்தின தேவன் உங்களையும் நிச்சயமாக உயர்த்தி உங்களுக்கு செய்ய வேண்டிய சகல ஆசீர்வாதங்களையும் தந்து வழிநடத்துவார் ஆமென்.

## II தேவனால் நேர்த்தியாக நடத்தப்பட்ட மோசே (உபா.34:11,12)

அவன் இஸ்ரவேலர் எல்லாருக்கும் பிரத்தியட்சமாய் செய்த சகல வல்லமையான கிரியைகளையும், மகா பயங்கரமான செய்கைகளையும் பார்த்தால், கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயைப் போல ஒரு தீர்க்கத்தரிசியும் இஸ்ரவேலில் அப்புறம் எழும்பினதில்லை என்று உபாகமம் 34:11,12ல் நாம் வாசிக்கின்றோம். வேதாகமம் முழுவதையும் நாம் வாசித்துப் பார்க்கும்போது எத்தனையோ தீர்க்கத்தரிசிகளை கர்த்தர் பயன்படுத்தியிருப்பதை நாம் காணமுடியும். ஆனால் மோசேயை கர்த்தர் பயன்படுத்தியது முற்றிலும் மிகச் சிறப்பானதாக இருக்கும். சிநேகிதர்கள் பேசுவது போல கர்த்தர் மோசேயோடே பேசினார். இந்த வழிநடத்துதலும் அதினதின் காலத்திலே கர்த்தர் நேர்த்தியாய் செய்ததேயாகும்.

கர்த்தர் மோசேயை நோக்கி நீ இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து அழைத்துச் செல்ல வேண்டும் என்று தெளிவாகப் பேசினார். லட்சக்கணக்கான ஜனங்களை வழிநடத்துவது ஒரு கடினமான காரியமாக இருந்தாலும் மோசேக்கு அது லகுவான காரியமாகவே இருந்தது. மோசேக்கு விரோதமாக மந்திரவாதிகள் உட்பட அநேகர் எதிர்த்து நின்றாலும் தன்னோடுகூட உள்ள ஜனங்கள் எதிர்த்து நின்றாலும் எல்லாவற்றையும் தேவ பலத்தோடு கடந்து வந்தார். ஆரம்ப நாட்களில் இந்தப் பணியைச் செய்ய மோசே மறுத்தாலும், பின்நாட்களில் இப்பணியை அவர் மூலமாக கர்த்தர் செய்து முடித்தார். எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளில் அணியணியாகப் புறப்பட்டார்கள் என்று வேதம் கூறுகின்றது. இது ஒரு கடினமான பணியாக இருந்தாலும், கர்த்தர் கூடவே இருந்ததால் தன்னுடைய காலம் முடியும் வரைக்கும் உண்மையும், உத்தமுமாய் செய்து முடித்தார்.

இச்செய்தியை வாசிக்கின்ற நாம் யாராக இருந்தாலும் கர்த்தரின் பணியையும் நாம் செய்ய வேண்டுமென்பது தேவனுடைய விருப்பமாகும். அந்த விருப்பத்தை நாம் அறிந்து நம்மை தேவனுக்கு ஒப்புக்கொடுத்தால் அதினதின் காலத்திலே நேர்த்தியாக தேவன் நடத்துவதை நாம் காண முடியும். இப்புதிய மாதத்திலும், இப்புதிய வருடத்திலும் கர்த்தர் கடந்த காலங்களை விட இன்னும் சிறப்பான வழியைக் காட்டுவார் என்று விசுவாசத்தோடு மோசேயைப் போல நீண்ட நேரம் ஜெபிக்க நாம் அழைக்கப் பட்டிருக்கின்றோம். ஊழியப் பாதையில் சில எதிர்ப்புகள் வந்தாலும் அவைகளை எல்லாம் தேவனுடைய பாதத்தில் வைத்துவிட வேண்டும். எல்லாவற்றையும் தேவன் பார்த்துக் கொள்வார். இலட்சக்கணக்கான ஜனங்களை மோசே வழிநடத்தினது போல நாமும் அநேகரை ஆண்டவருக்குள் வழிநடத்த நம்மை தகுதிப்படுத்த வேண்டும். இதுவரை நடந்திராத அற்புதங்கள் இனி நடைபெறும் ஆமென்.

## II தேவனால் நேர்த்தியாக நடத்தப்பட்ட பேதுரு (அப்.10:44)

அப்போஸ்தலனாகிய பேதுரு தேவனால் அழைக்கப்பட்ட பிரதான சீடனாவார். கர்த்தருக்கென்று வைராக்கியமாக வாழ்ந்த போதிலும் சில சமயங்களில் இயேசுவை விட்டு தூரத்திலே பின்செல்கிற ஊழியராக காணப்பட்டார். அவரை தேவன் அதினதின் காலத்திலே நேர்த்தியாய் பயன்படுத்தத் தொடங்கினார். அவருடைய தலைமையின் கீழ் மேல் வீட்டறையில் 120 பேர் கூடி ஜெபிக்கும் போது பரிசுத்த ஆவிக்குள்ளாக யாவரையும் வழிநடத்தினது பேதுருவேயாகும். தேவனால் கொர்நேலியு வீட்டிற்கு அழைக்கப்பட்ட போது நேர்த்தியாக பயன்படுத்தும் தேவன் பேதுருவையும் பயன்படுத்தத் தொடங்கினார். அவருடைய வார்த்தைகளை கேட்டவர்கள் யாவரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, பல்வேறு பாஷைகளை பேசக்கூடிய அளவிற்கு தேவனால் பேதுரு பயன்படுத்தப்பட்டார்.

இந்தக் கடைசிக் காலங்களில் யோசேப்பு, மோசே, பேதுரு ஆகியோர் மட்டுமல்ல, இச்செய்தியை வாசிக்கின்ற நாம் அனைவருமே தேவனால் பயன் படுத்தப்பட வேண்டும் என்பதே தேவசித்தமாகும். தேசிய அளவில் ஒரு பெரிய எழுப்புதல் வரும்படியாக நாம் நீண்ட நாட்களாக ஜெபித்துக் கொண்டு இருக்கின்றோம். நிச்சயமாகவே முடிவு உண்டு. உன் நம்பிக்கை வீண்போகாது என்ற வார்த்தையின்படி கர்த்தர் நம்மையும், நம்முடைய பிள்ளைகளையும் நம்மோடு ஊழியம் செய்யும் ஊழியர்களையும் பயன் படுத்தப்போகின்ற காலம் சமீபமாய் இருக்கின்றது. இயேசு கிறிஸ்துவின் வருகை சமீபம் என்று விசுவாசிக்கின்ற நாம், எழுப்புதலும் மிகச் சமீபம் என்று விசுவாசிக்க வேண்டும். இனி மேலை நாட்டு மிஷனெரிகள் வந்து ஊழியஞ்செய்வார்கள் என்று எதிர்பார்ப்பதை விட கர்த்தர் என்னையும், என் பிள்ளைகளையும் பயன்படுத்தும் என்று ஜெபித்து அர்ப்பணிப்பது நம்முடைய கடமையாகும். நாம் பேசத் தொடங்கின போது பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம் மேல் இறங்கினது போலவே அவர்கள் மேலும் இறங்கினார் (அப்.11:15) என்ற சாட்சி வார்த்தையின்படி நம் அனைவரும் ஊழியம் செய்ய வேண்டும்.

அறுப்பு மிகுதி. வேலையாட்களோ கொஞ்சம் ஆகவே தேவன் தகுதியான ஊழியர்களை எழுப்பும்படி நாம் ஜெபித்துக் கொண்டிருக்கவேண்டும். அப்போது தேவன் பரிசுத்த ஆவி பெற்ற ஊழியர்களை எழுப்பி நம்முடைய ஊழியங்களையும் மிகச் சிறப்பாக வழிநடத்துவார். இந்த புதிய நாட்களிலே, நமது சொந்த ஜெபங்களை இன்னும் அதிகமாக்கி தேவனுக்காக காத்திருப்போம். அப்போது அதினதின் காலத்திலே நேர்த்தியாய் நடத்துகிற ஆண்டவர் நாம் செய்து கொண்டிருக்கின்ற ஊழியங்களையும், நம் பிள்ளைகளையும் இன்னும் விசேஷமாக வழிநடத்துவார். நமது உலகப்பிரகாரமான தேவைகளையும் சந்திப்பார். ஆமென்.

சகோ. **P.D.ஞானப்பிரகாசம்,** சுரண்டை.

ஜெப எண் - 266 | ஜெப நாள்: 02-01-2024 செவ்வாய் | காலை 6.00 To மாலை 6.00 வரை.

## 12 மணி நேர உபவாச சங்கிலித் தொடர் ஜெபமும், மாதம் முழுவதும் ஜெபிக்க வேண்டிய ஜெப விண்ணப்பங்களும்

### 1. ஜனவரி மாதத்தின் ஆசீர்வாதங்களுக்காக

1. நியாயாதி.13:25 கர்த்தருடைய ஆவியானவர் அவனை (சிம்சோனை) ஏவத்துவங்கினார். தேவன் தமது ஆவியை நம் அனைவர் மீதும் பலமாய் ஊற்றவும், இதனால் இம்மாதம், இவ்வருடத்தில் கடினமாய் தோன்றும் நாட்கள் இலகுவாய் மாறவும், பிசாசின் திட்டங்கள் யாவும் அழிக்கப்படக்கூடிய ஆவியை தேவன் நமக்குத் தர ஜெபிப்போம்.

2. ஏசாயா 47:13 உன் திரளான யோசனைகளினால் நீ இளைத்துப் போனாய். திரளான யோசனைகள் நம்மை விட்டு இம்மாதத்தில் நீங்கவும், தேவ ஆலோசனை மட்டும் நம்மில் காணப்படவும், இன்னும் அதிகமாக வேதம் வாசித்து ஜெபிக்கவும், இந்த அனுபவத்தை நம்மை விட்டுக் குறைத்து விடாதபடி நாம் விழிப்புள்ளவர்களாய் காணப்படவும் ஜெபிப்போம்.

3. அப்.4:32 விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார், ஒரே இருதயமும், ஒரே மனமும் உள்ளவர்களாய் இருந்தார்கள். இந்த அனுபவம் நம்மில் இன்னும் பெருகவும், இம்மாதம் உண்மையிலே அப்போஸ்தலர் கால அனுபவமாய் இன்னும் மாறவும், இம்மாத ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் பல மாதங்களுக்கும் கடந்து வரவும், தேவன் பலத்த கிரியைகளைச் செய்யவும் ஜெபிப்போம்.

4. மாற்கு 4:39 அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப் பார்த்து, இரையாதே அமைதலாயிரு என்றார். இம்மாதத்தில் இயேசு எழுந்து, பிரச்சனைகளை எப்படி கடந்து வர வேண்டும் என்று நமக்கு கூறவும், இதனால் நம்முடைய விசுவாசமும், ஊழியமும் அதிகமாய் பெருகவும், கர்த்தர் இதுவரையில்லாத பெரிய கிரியைகளைச் செய்து நம்மை வழி நடத்தவும், அனேகருக்கு நாம் ஆசீர்வாதமாய் மாறவும் ஜெபிப்போம்.

5. யோவான் 14:26 நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். கடந்த மாதங்களில் நாம் மறந்துபோன ஆவிக்குரிய சத்தியங்களை ஆவியானவர் நமக்கு நினைப்பூட்டவும், இதனால் கர்த்தர் நம்மை அனேகர் மத்தியில் ஒரு சாட்சியாய் இம்மாதம் நிறுத்தவும், இதனால் புதிய புதிய ஆத்துமாக்கள் இயேசுவண்டை வரவும் ஜெபிப்போம்.

6. யோபு 42:2 தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன். இவ்வசனத்தின்படி தடைகள் யாவும் மாறும் என்ற விசுவாசம் நம்மில் பெருகவும், தேவன் நம் குடும்பத்தில், ஊழியத்தில் சகல ஆசீர்வாதங்களையும் தர ஜெபிப்போம்.

### 2. இந்தியாவின் எதிர்காலம் ஆசீர்வதிக்கப்பட :

1. அப்.1:26 சீட்டு மத்தியாவின் பேருக்கு விழுந்தது. தேவசித்தமானால் இவ்வருடம் நம் தேசத்தில் நடைபெறயிருக்கும் பாராளுமன்றத் தேர்தல் குறிப்பிட்ட காலத்தில் நடைபெறவும், தேவனுக்குச் சித்தமானவர் ஆட்சி அமைக்கவும், இதனால் இந்தியா உலக அளவில் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட தேசமாய் மாறவும், தேர்தல் அமைதியாக நடைபெறவும், கலவரங்கள் எங்கும் வராதபடி தேவன் காக்க ஜெபிப்போம்.

2. யோவான் 2:28 அதற்குப் பின்பு, நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். மிக சீக்கிரமாய் இந்தியாவில் உள்ள அனைத்து ஜனங்கள் மீதும் தேவன் தமது பரிசுத்த ஆவியை அளவில்லாமல் ஊற்றவும், அதனால் யாவரும் அந்நியபாஷை பேசி, தீர்க்கத்தரிசனம் சொல்லவும், இயேசுவின் வருகையில் இந்தியாவில் உள்ள யாவரும் காணப்படவும், தேவன் இவ்விதமாய் கிரியை செய்யவும் ஜெபிப்போம்.

3. தானியேல் 6:11 அப்பொழுது அந்த மனுஷர் கூட்டங்கூடி, தானியேல் தன் தேவனுக்கு முன்பாக ஜெபம் பண்ணி, விண்ணப்பம் செய்கிறதைக் கண்டார்கள். தேசத்தில் காணப்படும் பிரச்சனைகள், எதிர்ப்புகள் யாவும் ஜெபத்தின் மூலம் மறையவும், சோர்ந்து போனவர்கள், இனி உற்சாகமாய் ஜெபிக்கவும், ஜெபத்தின் வல்லமையை இந்திய மக்கள் இன்னும் அதிகம் காணவும் ஜெபிப்போம்.

4. II நாளாகமம் 20:20 யோசபாத் நின்று, யூதாவே, எருசலேம் குடிகளே கேளுங்கள். உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள். அப்பொழுது நிலைப்படுவீர்கள் என்றான். தன் ஜனங்களுக்கு திடன் சொன்ன யோசபாத் ராஜா போல், நம் தேசத்தின் மூப்பர்கள் ஜனங்களுக்கு இன்னும் திடன் சொல்லவும், இதனால் ஜனங்களுக்குள் எப்போதும், உற்சாகம் காணப்படவும், குழப்பங்கள் மாறவும், தேவன் கிருபை செய்ய ஜெபிப்போம்.

5. I ராஜாக்கள் 17:1 என் வாக்கின்படியே அன்றி, இந்த வருஷங்களிலே பனியும், மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் (எலியா) அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றான். எலியா போன்ற தீர்க்கதரிசிகள் இன்னும் நம் தேசத்தில் எழும்பவும், பலத்த எழுப்புதல் நம்மைக் கொண்டும் கர்த்தர் செய்ய ஜெபிப்போம்.

## 3. விசுவாசிகளுக்காகவும், ஊழியர்களுக்காகவும் :

1. எபிரெயர் 12:1 நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோட ஓடக்கடவோம். விசுவாசிகளும், ஊழியர்களும் தேவன் தங்களுக்கு நியமித்திருக்கிற ஆவிக்குரிய ஓட்டத்தில் தொடர்ந்து ஓடவும், பாரமாய் இருக்கிற காரியங்களை தள்ளவும், தேவன் கிரியை செய்யவும், ஒவ்வொருவரையும் தேவன் இன்னும் பயன்படுத்தவும், இவர்கள் மூலம் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

2. ஏசாயா 54:17 உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம். இவ்வசனத்தின்படி, தேவன் விசுவாசிகளையும், ஊழியர்களையும் பாதுகாக்கவும், பராமரிக்கவும், இதனால் நல்லதொரு ஆவிக்குரிய வளர்ச்சி இவர்களுக்கு உண்டாகவும், இவர்கள் மூலம் புதிய விசுவாசிகளும் ஊழியர்களும் இன்னும் அதிகம் உருவாக்கப்படவும், எந்த பெலவீனமும் இவர்களுக்கு வராமலிருக்க ஜெபிப்போம்.

3. ரோமர் 10:11 அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று வேதம் கூறுகின்றது. எந்தவொரு பிரச்சனையும், போரட்டங்களும் வந்தாலும் விசுவாசிகளும், ஊழியர்களும் வெட்கப்படாமல் தங்கள் கடமைகளைச் செய்ய தேவன் பெலன் தரும்படியாக, குறிப்பாக இவர்களது குடும்பங்கள், பிள்ளைகள் ஆவியில் அதிகமாய் பெலப்படவும், ஊழியம் செய்யவும ஜெபிப்போம்.

4. I கொரி.12:8-10 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்ட, ஒன்பது வரங்களை உடையவர்களாக விசுவாசிகளும், ஊழியர்களும் காணப்படவும், இக்கடைசிக் காலத்தில் இவர்கள் மூலம் அநேகருக்கு தீர்க்கத்தரிசனம் கூறவும், இதுவரையில்லாதவர்களுக்கு புதிய கிருபைகளைத் தேவன் தந்தருளவும், ஊழியம் செய்வது, மிகுந்த மனவிருப்பமாய் இவர்களுக்குக் காணப்படவும், தடைகள் மாறவும் ஜெபிப்போம்.

5. கலாத்தியர் 3:9 அந்தப்படி, விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். விசுவாசிகளும், ஊழியர்களும், ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் அனைத்தையும் உரிய காலத்தில் பெற்றுக் கொள்ளவும், ஒரு குறையும் இவர்களுக்கு வராமல் தேவன் பாதுகாக்கவும், புதிய ஆண்டில் இவர்கள் தேவனுக்காக வல்லமையாய் பிரகாசித்து ஊழியம் செய்ய ஜெபிப்போம்.

## 4. எழுப்புதல் ஜெப ஐக்கியத்திற்காகவும், தேவன் கிரியை செய்யவும்:

1. யோசுவா 21:45 கர்த்தர் இஸ்ரவேல் குடும்பத்தாருக்குச் சொல்லியிருந்த நல் வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப் போகவில்லை. எல்லாம் நிறைவேறிற்று. ஐக்கியத்திற்கு சொன்ன அனைத்து வார்த்தைளும் நிறைவேறவும், திரளான பேர் ஐக்கிய ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ளவும் ஜெபிப்போம்.

2. I சாமுவேல் 3:19 சாமுவேல் வளர்ந்தான். கர்த்தர் அவனுடனே கூட இருந்தார். நம் ஐக்கியத்துடன் கர்த்தர் இருந்து சாமுவேல் எப்படி உயர்த்தப்பட்டாரோ அப்படியே ஐக்கியம் வளரவும், ஐக்கியத்தில் தேவனின் கிரியைகள் இன்னும் பலமாய் விளங்கவும், புதிய ஆத்துமாக்களை தேவன் ஐக்கியத்தில் சேர்க்கவும் ஜெபிப்போம்.

3. எரேமியா 3:14 நான் உங்களை ஊரில் ஒருவனும், வம்சத்தில் இரண்டு பேருமாகத் தெரிந்து, உங்களை சீயோனுக்கு அழைத்துக் கொண்டு வந்து.... இந்த வசனம் ஐக்கியத்தில் ஏற்ற வேளையில் நிறைவேறவும் அதற்கு ஏற்ற ஜெபம் இன்னும் ஏறெடுக்கப்படவும், அதற்குரிய வழியை தேவன் காண்பிக்கவும் ஜெபிப்போம்.

4. அப்.19:11 பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். இதேபோல் கர்த்தர் ஐக்கியத்திலும் நடத்தவும், அதற்கு ஐக்கியம் இன்னும் தகுதிப்படவும், இன்னும் அநேக வாசல்கள் ஊழியத்திற்கு திறக்கவும், ஓர் ஆவிக்குரிய எழுப்புதல் ஐக்கியம் மூலம் நடைபெறவும் ஜெபிப்போம்.

5. ரோமர் 5:5 மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால்... தேவ அன்பு ஐக்கிய ஊழியர்களிடம் இன்னும் காணப்படவும், ஆவியில் நிறைந்து ஊழியம் நடைபெறவும் எழுப்புதலை தடைசெய்யும் பிசாசின் கிரியை அழிக்கப்படவும் ஜெபிப்போம்.

6. II கொரி 13:5 நீங்கள் விசுவாசமுள்ளவர்களோ என்று உங்களை நீங்களே சோதித்துப் பாருங்கள். ஐக்கிய ஊழியர்கள் இந்த வசனத்தின்படி தங்களை தினமும் சோதித்துப் பார்க்கவும், குறைகளை நிவிர்த்தி செய்யவும், ஒவ்வொருவரின் விசுவாசமும், சகலத்தையும் ஜெயிக்கிற ஜெயமாக மாறவும், தேவன் கிரியை செய்யவும் ஜெபிப்போம்.

7. I தெசலோனிக்கேயர் 5:17 இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள். இந்த அனுபவத்தை ஐக்கியமும், குடும்பத்தாரும் இன்னும் அதிகமாய் பெற்றுக் கொள்ளவும், வரும்நாட்களில் ஜெபமே ஜெயமாக மாற ஜெபிப்போம்.

ஜனவரி 2024

## தினமும் வேதத்தின் மகத்துவங்களைத் தியானித்து, ஜெபியுங்கள்.

01.01.24 திங்கள் : எஸ்தர் 8:17 யூதருக்குப் பயப்படுகிற பயம் தேசத்து ஜனங்களைப் பிடித்ததினால், அவர்களில் அநேகர் யூத மார்க்கத்தில் அமைந்தார்கள். எஸ்தரின் நாட்களில் யூதருக்குப் பயப்படுகிற பயம் ஜனங்களுக்குள் உண்டானபடியினால் அவர்களில் அநேகர் யூதமார்க்கத்தில் சேர்ந்தார்கள். அதுபோல இப்புதிய ஆண்டிலும் திரளான ஜனங்கள் இயேசுவை தெய்வமாக ஏற்றுக்கொள்ளவும், அதினால் நம்முடைய தேசம் சமாதானமடைந்து கர்த்தருக்கு சாட்சியாய் வாழ நாம் ஜெபத்துடன் முயற்சி செய்ய வேண்டும்.

02.01.24 செவ்வாய் : யோபு 6:25 செம்மையான வார்த்தைகளில் எவ்வளவு வல்லமை உண்டு? இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளில் வல்லமைக் காணப்பட்டது. லாசருவே வெளியே வா என்ற வல்லமையுள்ள வார்த்தையில் லாசரு உயிரோடு எழுந்தார். இப்படிப்பட்ட வல்லமையுள்ள வார்த்தைகள் ஊழியர்களாகிய நமக்குத் தேவை அதற்காக நாம் கருத்துடன் ஜெபிப்போம். தேவன் ஒவ்வொருவரைக் கொண்டும் பலத்த கிரியைகள் செய்வார். அவிசுவாசமான எண்ணங்கள் நம்மை விட்டு விலகவும், தேவன் உதவிசெய்வார்.

03.01.24 புதன் : சங்கீதம் 15:5 தன் பணத்தை வட்டிக்குக் கொடாமலும் குற்றமில்லாதவனுக்கு விரோதமாய் பரிதானம் வாங்காமலும் இருக்கிறான். இப்படிச் செய்கிறவன் என்றென்றைக்கும் அசைக்கப்படுவதில்லை. இவ்வசனத்தின்படி அனைவரும் நடக்கவும், இதில் குறையுள்ளவர்கள் தங்களை சீர்படுத்திக்கொள்ளவும் வேண்டும். யூதாஸ் பண ஆசையில் வீழ்ச்சியடைந்தார். எலிசா பணஆசையில் விழாமல் ஊழியத்தில் சிறப்பான ஆசீர்வாதம் பெற்றார். நமக்குள் உள்ள குறைபாடுகளை வசனத்தின் மூலம் சரிசெய்வோம்.

04.01.24 வியாழன் : நீதிமொழிகள் 3:27 நன்மைசெய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது, அதை செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே. இயேசுவைத் தேடி வந்த ஐசுவரியம் உள்ள வாலிபன் இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் துக்கமுகமாய் திரும்பிப்போனது போல, நமக்கும் தேவன் தந்திருக்கின்ற வசதி வாய்ப்புகளை செய்யத்தக்கவர்களுக்கு செய்தால் தேவன் நமக்கு இன்னும் செய்வார். ஐசுவரியம் உள்ள வாலிபனைப் போல நம் வாழ்க்கை இருந்துவிடாதபடி நாம் கவனமுடையவர்களாக இருக்க வேண்டும்.

05.01.24 வெள்ளி : பிரசங்கி 9:18 யுத்த ஆயுதங்களைப் பார்க்கிலும் ஞானமே நலம்; பாவியான ஒருவன் மிகுந்த நன்மையைக் கெடுப்பான். ஆகாப் ராஜா நாபோத்தினுடைய திராட்சத்தோட்டத்தை தவறாக அபகரித்துக் கொண்டான். அதனால் அவனுடைய வாழ்வில் கூடுதல் ஆசீர்வாதங்கள் இல்லாமல் போய்விட்டது. தேவன் நமக்குத் தந்திருக்கின்ற ஆசீர்வாதங்களை சரியாகப் பயன்படுத்தாமல் இருப்போமானால் தேவன் நம்மை ஒரு பாவியாக எண்ணுவார். நம்முடைய ஆசீர்வாதங்களை நாம் அனுபவிக்க முடியாது.

06.01.24 சனி : உன்னதப்பாட்டு 2:15 திராட்சத்தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறுநரிகளையும் நமக்குப் பிடியுங்கள். இளையகுமாரன் தன்னுடைய வீழ்ச்சிகளை கண்டறிந்து தகப்பனிடம் போய் ஒப்புரவானது போல நம்மிடம் காணப்படும் குறைபாடுகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சரி செய்ய வேண்டும். அவைகளை வளரவிடும்போது உரிய பலனை நாம் பெற்றுக்கொள்ள முடியாது. சிறிய குறைதானே என்று மனமேட்டிமையாய் இருப்பது நல்லதல்ல. நம்முடைய வாழ்வை ஆண்டவரே தட்டி எழுப்புவார்.

07.01.24 ஞாயிறு : ஏசாயா 6:8 பின்பு யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அன்றைக்கு ஆண்டவரின் சத்தம் கேட்டு ஏசாயா தன்னை முழுமையாக ஆண்டவருக்கு அர்ப்பணித்தார். அதுபோல நாம் எந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தாலும் ஆண்டவருக்கு பணி செய்ய வேண்டும். அப்பணியை தாமதமாகச் செய்வதைவிட உடனடியாக ஏசாயா சொன்னது போல நான் இருக்கிறேன் என்னை அனுப்பும் என்று நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வோம்.

08.01.24 திங்கள் : எரேமியா 17:9 எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளது மாயிருக்கிறது. ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்ப்பது சுத்த இருதயமே ஆகும். இருதயத்தை தேவனுக்கு ஒப்புக்கொடுக்காமல் மற்ற காணிக்கைகள் படைப்பது விசேஷித்த காரியம் அல்ல. அப்போஸ்தலர்கள் அனைவரும் தங்கள் இருதயங்களை சுத்திகரித்து ஊழியஞ்செய்தபடியால் கர்த்தர் அவர்களை வல்லமையாக பயன்படுத்தினார். அதுபோல நம்முடைய இருதயங்களையும் ஆராய்ந்துப்பார்த்து கர்த்தரால் பயன்படுவோம்.

09.01.24 செவ்வாய் : புலம்பல் 5:21 கர்த்தாவே, எங்களை உம்மிடத்தில் திருப்பிக்கொள்ளும், அப்பொழுது திரும்புவோம். பூர்வகாலத்திலிருந்தது போல எங்கள் நாட்களைப் புதியவைகளாக்கும். பேதுரு தன்னுடைய பின்

வாங்கின நிலையை உணர்ந்து மனபாரத்துடன் இயேசுவண்டை திரும்பினார். கர்த்தர் அவரை நன்றாக பயன்படுத்தினார். அதுபோல நாமும், நம்முடைய பிள்ளைகளும் தேவனை விட்டு பின்வாங்கியிருந்தால், இந்த நாட்களில் நம்மை அவருடைய சித்தத்திற்கு ஒப்படைத்துக்கொள்வோம்.

10.01.24 புதன்: எசேக்கியேல் 14:23 நான் அதிலே செய்த எல்லாவற்றையும் முகாந்தரமில்லாமல் செய்யவில்லையென்று அப்பொழுது அறிந்து கொள்வீர்கள். தேவன் தமது பிள்ளைகளுக்கு எதைச்செய்தாலும் ஒரு நோக்கத்தோடு செய்வார். காரணம் இல்லாமல் எந்தக்காரியமும் நடைபெற விடமாட்டார். சீஷர்களை தன் பக்கமாக வைத்து வழிநடத்தியதால் ஏற்ற காலம் வரும்போது நீங்களே அவர்களுக்கு போஜனம் கொடுங்கள் என்று ஊழியத்தில் அவரை வளர்ச்சி அடையச்செய்தார். இதற்காக தான் சீஷர்களைத் தெரிந்து கொண்டார்.

11.01.24 வியாழன்: தானியேல் 2:49 தானியேல் ராஜாவை வேண்டிக்கொண்டதின்பேரில் அவன் சாத்ராக்கையும், மேஷாக்கையும், ஆபேத்நேகோவையும் பாபிலோன் மாகாணத்துக் காரியங்களை விசாரிக்கும்படி வைத்தான். அந்த 3 யூத வாலிபர்களுக்கு தானியேல் ஒரு வழிகாட்டியாய் விளங்கினார். அதுபோல உங்கள் ஒவ்வொருவரையும் அநேகருக்கு ஆவிக்குரிய வழிகாட்டிகளாக தேவன் இனி வழிநடத்துவார். தேவன் காட்டும் வழியிலேயே தைரியமாக செல்வோம்.

12.01.24 வெள்ளி : ஓசியா 4:1 இஸ்ரவேல் புத்திரரே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். கர்த்தருடைய வார்த்தையை நாம் அனைவரும் அதிகமாக கேட்க வேண்டிய காலம் இதுவாகும். ஏனென்றால் பிரச்சனைகள் நமக்கு அதிகமாக வந்து கொண்டிருக்கிறது. இவைகளின் மத்தியில் கர்த்தருடைய வசனத்தை உடையவர்களாக நாம் வசனத்தினால் வழிநடத்தப்படுவோம். எலியா தீர்க்கத்தரிசி கர்த்தருடைய வார்த்தையை உடையவராக ஆகாப் ராஜாவுக்கு வழிகாட்டியாய் விளங்கினார். கர்த்தர் நம்மையும் வசனத்தால் நிரப்புவார்.

13.01.24 சனி : யோவேல் 1:3 இதன் செய்தியை உங்கள் பிள்ளைகளுக்குத் தெரிவியுங்கள். ஒவ்வொரு குடும்பத்திலுள்ள பெற்றோர் யாவரும் தங்கள் பிள்ளைகளுக்கு வேத வசனத்தை செய்தியாக கற்றுக்கொடுக்க வேண்டும். அப்படிசெய்யும் போது அந்த பிள்ளைகள் முதிர்வயது வரைக்கும் அந்த வசனத்தின்படி நடப்பார்கள். அன்னாள் இதைபோல செய்தபடியால் சாமுவேல் வாழ்க்கை முழுவதும் அநேகருக்கு ஆசீர்வாதமாக இருந்தது. நாம் செய்ய வேண்டிய முக்கிய கடமை இதுவேயாகும்.

14.01.24 ஞாயிறு : ஆமோஸ் 8:11 இதோ, நான் தேசத்தின்மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும்... கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்கிறார். இப்படிப்பட்ட காலங்கள் வந்துக்கொண்டிருக்கின்றது நாம் அனைவரும் மிகவும் ஜாக்கிரதையாக இருந்து வசனங்களை உட்கொள்ள வேண்டும். தீர்க்கத்தரிசிகள் வசனத்துடன் ஊழியம் செய்தார்கள். இன்றைக்கு நாம் அனைவரும் வசனத்தின்படி ஊழியஞ்செய்ய தீர்க்கத்தரிசியாக கர்த்தர் அழைத்திருக்கிறார்.

15.01.24 திங்கள் : ஒபதியா 1:17 ஆனாலும் சீயோன் பர்வதத்திலே தப்பியிருப்பார் உண்டு. அவர்கள் பரிசுத்தமாயிருப்பார்கள்; யாக்கோபின் வம்சத்தார் தங்களுடைய சுதந்தரங்களைச் சுதந்தரித்துக்கொள்வார்கள். நாம் அனைவரும் இன்னும் பரிசுத்தமாக வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். இஸ்ரவேல் ஜனங்கள் தங்களை பரிசுத்தமாக்கி அற்புதங்களை பெற்றார்கள். கர்த்தர் நம்மை இன்னும் பரிசுத்தப்படுத்த நம்மை குடும்பமாக தேவனுக்கு ஒப்புக்கொடுப்போம். கர்த்தர் நம்மோடு கூடயிருந்து கிரியை செய்வார்.

16.01.24 செவ்வாய் :யோனா 3:10 அவர்கள் தங்கள் பொல்லாதவழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, நான் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார். யோனாவின் நாட்களில் நினிவே பட்டணம் மனந்திரும்பினது போல நம்முடைய நாட்களிலும் இப்படிப்பட்ட எழுப்புதல் வரும்படியாக கருத்தோடு ஜெபித்து செயல்படுவோம். அப்பொழுது தேவன் நம்மை இன்னும் விசேஷமாக பயன்படுத்துவார்.

17.01.24 புதன் : மீகா 4:11 சீயோன் தீட்டுப்படுவாளாக, எங்கள் கண் அவளைக் காண்பதாக என்று சொல்லி, அநேக ஜாதியார் உனக்கு விரோதமாகக் கூடியிருக்கிறார்கள். ஊழியர்களாகிய நம் அனைவருக்கும் வெளிப்படையான எதிர்ப்புகள் மட்டுமல்ல, மறைமுகமான எதிர்ப்புகளும் உண்டு. ஆதி அப்போஸ்தலர்கள் அந்நாளிலே கூடி ஜெபித்தது போல இந்நாளிலும் நாம் அனைவரும் இன்னும் ஜெபிக்க வேண்டும். அப்போது நமக்கு விரோதமாக எழும்பும் ஆயுதம் வாய்க்காதே போவதை நாம் காணமுடியும்.

18.01.24 வியாழன் : நாகூம் 2:12 சிங்கம் தன் குட்டிகளுக்குத் தேவையானதைப் பீறி, தன் பெண் சிங்கங்களுக்கு வேண்டியதைத் தொண்டையைப் பிடித்துக் கொன்று, இரைகளினால் தன் கெபிகளையும், பீறிப்

போட்டவைகளினால் தன் தாபரங்களையும் நிரப்பிற்று. சிங்கம் தன் குட்டிகளுக்கு வேண்டியதைக் கொடுப்பது போல, ஆண்டவரின் பிள்ளைகளாகிய நமக்கும் உலகப்பிரகாரமாயும், ஊழியப்பாதையிலும் குறையில்லாமல் கர்த்தர் வழிநடத்துவார். தைரியமாய் கர்த்தருக்கு ஊழியம் செய்வோம்.

19.01.24 வெள்ளி : ஆபகூக் 2:3 குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது. நம் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட தரிசனம் தேவை அதை ஜெபத்துடன் அறிந்து கொள்ள வேண்டும். அந்த தரிசனம் நிறைவேறுவதற்கு நாம் போராடி ஜெபிக்க வேண்டும். யோசேப்புக்கு தேவன் நியமித்த தரிசனம் முழுமையாக நிறைவேறியது. அதை நிறைவேற்றி முடிக்க பரிசுத்த ஆவியானவர் உதவி செய்வார். நாம் அனைவரும் இன்னும் பரிசுத்த ஆவியைப் பெற்று நம்முடைய தரிசனத்தை நிறைவேற்ற பிரயாசப்படுவோம்.

20.01.24 சனி : செப்பனியா 1:6 கர்த்தரை விட்டு பின்வாங்குகிறவர்களையும், கர்த்தரைத் தேடாமலும், அவரைக்குறித்து விசாரியாமலுமிருக்கிறவர்களையும், இவ்விடத்தில் இராதபடிக்குச் சங்காரம் பண்ணுவேன். இப்படிப்பட்ட வார்த்தை தேசத்தில் உள்ளோர் மேல் நிறைவேறிவிடக்கூடாது. தேசத்தை குறித்தான பாரத்துடன் நாம் ஜெபம் செய்யும்போது தேசம் இரட்சிக்கப்படும். நாகமான் குஷ்டரோகி வாழ்ந்த நாட்களில் சீரிய தேசம் முழுமையும், இரட்சிக்கப்பட்டது போல நம் காலத்திலும் நடைபெறும்.

21.01.24 ஞாயிறு: ஆகாய் 2:7 சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார். சகல ஜாதிகளும் இயேசுவை ஏற்றுக் கொள்ளும்போது உலகம் முழுவதிலும் தேவனின் ஆளுகை உண்டாகும். அப்படிப்பட்ட நாட்களுக்காக நாம் விசுவாசத்துடன் காத்திருக்க வேண்டும். இயேசுவின் சீடர்கள் உலகமெங்கும் போய் சுவிசேஷம் அறிவித்தது போல நாம் அனைவரும் சுவிசேஷம் அறிவிக்க வேண்டும். அதற்கு நல்ல சூழ்நிலையை தேவன் ஏற்படுத்தித் தருவார்.

22.01.24 திங்கள் : சகரியா 10:1 பின்மாரிகாலத்து மழையை கர்த்தரிடத்தில் வேண்டிக் கொள்ளுங்கள்; அப்பொழுது கர்த்தர் மின்னல்களை உண்டாக்கி, வயல்வெளியில் அவரவருக்குப்பயிருண்டாக அவர்களுக்கு மழையைக் கட்டளையிடுவார். பெந்தெகொஸ்தே நாளில் கூடியிருந்து ஜெபித்தவர்களுக்கு ஆவிக்குரிய மழை ஊற்றப்பட்டது போல நம்முடைய நாட்களிலும் நிச்சயம் நடைபெறும். ஊழியர்களும், விசுவாசிகளுமாகிய நாம் சிறிதளவுகூட அவிசுவாசம் வராமல் நம்மை காத்துக் கொள்ள வேண்டும்.

23.01.24 செவ்வாய் : மல்கியா 4:2 ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும். அப்போஸ்தலர்கள் யாவரும் அபிஷேகத்திற்காக காத்திருந்து தேவனால் விசேஷமாக பயன்படுத்தப்பட்டது போல நம் பிள்ளைகள் மேலும், பிள்ளைகளின் பிள்ளைகள் மேலும் பரிசுத்த ஆவி இறங்கி வரப் போகிறது. அதற்கு நாம் வேத வசனங்களை வாசித்து வசனத்தின்படி நடக்க நம்மை இன்னும் ஆயத்தப் படுத்துவோம். வெகு சீக்கிரமாக நீதியின் சூரியனாகிய இயேசு யாவர் மேலும் உதிப்பார்.

24.01.24 புதன் : மத்தேயு 25:3 புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டுபோனார்கள், எண்ணெயையோ கூடக்கொண்டுபோகவில்லை. மணவாளனை சந்திக்க வேண்டிய கன்னிகைகளில் ஐந்து பேர் புத்தியற்றவர்களாக இருந்தார்கள். ஆகவே அவர்கள் பெரும் பாக்கியத்தை இழந்தார்கள். ஆவிக்குரிய ஊழியர்களாகிய நாம் அனைவரும் தீவட்டி என்ற இரட்சிப்போடுக்கூட, எண்ணெய் என்கிற அபிஷேகத்தையும் எப்போதும் உடையவர்களாக வாழ்ந்து மணவாளனைச் சந்திக்க இன்னும் ஆயத்தப்படுவோம்.

25.01.24 வியாழன் : மாற்கு 4:18 வசனத்தைக்கேட்டும், உலகக்கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும். மற்றவைகளைப்பற்றி உண்டாகிற இச்சைகளும் உட்பிரவேசித்து, வசனத்தை நெருக்கிப்போட, அதினால் பலனற்றுப் போகிறார்கள். முள்ளுள்ள இடங்களில் உள்ள விதையைப்போல நாம் இராமல், முட்கள் போல நம்மை ஆவிக்குள் வளர விடாதபடி தடைசெய்கிற சூழ்நிலைகளை நம்மை விட்டு விலக்க வேண்டும். கவலைகளையும், பாரங்களையும், நாம் உதறிவிட்டால் நல்ல வளர்ச்சியைக் காண முடியும்.

26.01.24 வெள்ளி : லூக்கா 19:5 சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்க வேண்டும் என்றார். இயேசு தங்கின சகேயுவின் வீடு இரட்சிக்கப்பட்டதுபோல, நம்முடைய உறவினர்கள் அனைவர் வீட்டிலும் இயேசு எப்போதும் தங்கியிருக்க வேண்டும். அப்போது அந்தந்த வீடுகளில் தேவ சமாதானம் ஆளுகைசெய்யும். இப்படி நடைபெற முடியாதபடி தடைசெய்யும் சாத்தானின் வல்லமைகள் இயேசுவின் நாமத்தில் அழிக்கப்பட அவைகளை கட்டி ஜெபிப்போம்.

27.01.24 சனி :யோவான் 14:1 உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. கலங்கின இருதயத்தை திடப்படுத்துபவர் இயேசு. இயேசு எப்போதும் நம்முடைய ஊழியத்தில் கூடவேயிருந்து கலங்கி வரக்கூடிய சூழ்நிலைகளை மாற்றவும், இன்னும் மேலான வழிநடத்துதலை நமக்குப் போதிக்க ஆவலாய் இருக்கிறார். நாம் விரும்பி ஆண்டவரை அழைக்க வேண்டும். கலங்கி நின்ற அநேகரை திடப்படுத்தின இயேசு நம்மையும் இந்நாளில் திடப்படுத்துவார். நம்முடைய துக்கங்களை எல்லாம் சந்தோஷமாய் மாறுவதை நாம் காணயிருக்கின்றோம்.

28.01.24 ஞாயிறு : அப்போஸ்தலர் 3:1 ஜெபவேளையாகிய ஒன்பதாம்மணி நேரத்திலே பேதுருவும், யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள். ஜெபத்தில் பின்தங்கின இவர்கள் முன்மாதிரியாக ஜெபத்தில் வளர்ச்சி பெற்றார்கள். அதற்கு அடையாளம் தான் பிறவிச்சப்பாணி சுகமானதாகும். அதைபோல நாம் ஜெபத்தில் முன்னேறுகிறோம் என்பதற்கு அடையாளம் நம்முடைய நல்ல ஆவிக்குரிய தீர்மானமே. இன்னும் வரும் நாட்களில் ஜெபிக்கிற நேரங்களை கூடுதலாக்க வேண்டும். அப்போஸ்தலர் காலங்களில் நடைபெற்ற தேவனின் கிரியைகள் நம்முடைய காலத்திலும் நிச்சயம் நடைபெறும். இன்னும் வேதத்தைத் தியானிப்போம்.

29.01.24 திங்கள் : ரோமர் 8:31 தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார். யோசபாத் ராஜா கர்த்தரைத் தம்முடைய பட்சத்தில் வைத்துக்கொண்டபடியால் எதிரி நாட்டு ராஜாக்கள் அவரை மேற்கொள்ள முடியவில்லை. காரணம் கர்த்தரே அவர்களுக்காக யுத்தம் செய்தார். இதைபோல அநேக பிரச்சனைகள் நமக்கு இருந்தாலும். கர்த்தர் நமக்காய் யுத்தம் செய்யும்படி நாம் விரும்பி அழைக்க வேண்டும். நம்மை எதிர்ப்பவர்கள் மத்தியில் குழப்பத்தை தேவன் அனுப்பி நமக்கு வெற்றியைத் தருவார்.

30.01.24 செவ்வாய் :I கொரிந்தியர் 3:1 சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல் மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேச வேண்டியதாயிற்று. கொரிந்து சபையில் அநேகர் ஆவிக்குரிய ஜீவியத்தில் குழந்தைகள் போல காணப்பட்டார்கள். அதுபோல இந்நாட்களிலும் நாம்ஆவிக்குரிய குழந்தைகளாய் இராமல் நல்ல வளர்ச்சியுடையவர்களாக நாம் தேர்ச்சி அடைய வேண்டும். இது எழுப்புதலின் காலமாகும்.

31.01.24 புதன் : II கொரிந்தியர் 9:2 உங்கள் ஜாக்கிரதை அநேகரை எழுப்பிவிட்டதுமுண்டு. அநேகர் ஆவிக்குரிய எழுப்புதல் அடைய வேண்டுமானால் சிலர் முன்கூட்டியே எழுப்புதல் அடைய வேண்டும். இந்நாட்களில் கர்த்தர் நம் அனைவரையும் ஆவிக்குரிய எழுப்புதலுக்காக அழைத்திருக்கிறார். இனி நாம் சோர்வடைந்துவிடாதபடி இருக்கிறவர்களை கொண்டு ஜெபிக்க தொடங்குவோம். கர்த்தர் ஏற்ற வேளையில் திரளானவர்களை எழுப்பி யாவரையும் நம்மைப்போல பயன்படுத்துவார். இப்படிப்பட்ட நாட்களுக்காக நாம் காத்திருந்து ஜெபிப்போம். ஆமென்.

## 2024-ம் வருட ஐக்கிய வாக்குத்தத்தம்

**உங்களைப்பார்க்கிலும் ஜனம் பெருத்த பலத்த ஜாதிகளை நீங்கள் துரத்துவீர்கள்.**
உபாகமம் 11:23

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, தேவன் நம் மீதும், நம் ஐக்கியத்தின் மீதும் வைத்திருக்கும் கிருபைகள் மகா பெரியது. அவ்வப்போது, தேவனின் வார்த்தைகள் நம்மை பெலப்படுத்துவதை நாம் அனுபவித்திருக்கின்றோம். இப்புதிய ஆண்டிலும் ஐக்கியத்தை வழி நடத்த ஜெபித்தோம். தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு, உபாகமம் 11:23ம் வசனத்தின் பின் பகுதியாகிய மேலே கொடுக்கப்பட்டுள்ள வசனத்தை, நமக்காகத் தந்துள்ளார். இஸ்ரவேல் ஜனங்களை வழி நடத்த தேவ கட்டளை பெற்ற ஊழியர்களாகிய மோசே, ஆரோன் ஆகியோர் மூலம் சிறப்பாக வழி நடத்தும் போது, அவ்வப்போது சில பலத்த ஜாதிகளாகிய, ஏத்தியர், கிர்காசியர், எமோரியர், கானானியர், பெர்சியர், ஏவியர், எபூசியர் (உபாகமம் 7:1) ஆகியோர் தேவ ஜனங்களுக்கு எதிராக யுத்தம் செய்ய வந்தார்கள். அவர்கள் யாவரும் நம்மை விட பெலசாலிகள் தான். ஆனால் நீங்கள் அவர்களைத் துரத்துவீர்கள் என்று தேவன் நமக்கு வாக்குப்பண்ணி, அவர்களை ஜெயிக்கும் அபிஷேகத்தையும் நமக்குத் தந்து வழிநடத்துவார்.

இப்புதிய வருட வார்த்தையின்படி நாம் நடந்தால் இந்த ஆண்டும் நம் குடும்பங்களிலும், நாம் செய்து வரும் ஊழியங்களிலும், நாம் வேலை செய்யும் ஸ்தலங்களிலும் நமக்கு எதிராக வரும் பலத்த ஜாதிகளை ஜெயிக்க தேவன் நமக்கு எப்போதும் பெலன் தர வசனத்தின் மூலம் ஜெபிப்போம். இதுவரை நம்மை நடத்திய தேவன், இவ்வாண்டும் மிகச்சிறப்பாக வழி நடத்துவார். இந்த வசனம் நம் ஐக்கிய ஊழியர்கள் மேல், பலமாய் கிரியை செய்ய ஜெபித்துக் கொள்ளுங்கள். நாங்களும் உங்களுக்காக ஜெபித்துக் கொண்டிருப்போம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக ஆமென்.

எச்சரிப்பு வசனம் :

**ஞானவான்கள் கர்த்தருடைய கிருபைகளை உணர்ந்து கொள்ளுவார்கள்.** சங்கீதம் 107:43

**தேவனுக்கே மகிமை**

பெண்கள் பகுதி

# தேவன் நமக்கு நன்மையைத் தருவார் - சங்கீதம் 65:11

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே, இந்த புதிய வருடத்திலே உங்கள் யாவருக்கும் புத்தாண்டு வாழ்த்துதல் கூறிக்கொள்கிறேன். இந்த வருடத்தின் புதிய மாதத்திலே தேவன் நமக்கு நன்மையைத் தருவார். யாருக்கு நன்மை தருவார் என்ற செய்தியை ஜெபத்தோடு தியானிப்போம்.

சங்கீதம் 65:11 வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய் பொழிகிறது என எழுதியிருக்கிறார். உலகில் வாழும் யாவரும் நன்மையைத் தேடி ஓடுகிறோம். வேதத்தின் அடிப்படையில் நாம் நன்மையைக் கண்டடைய வேண்டுமென்றால் அது யார் யாருக்கு கிடைக்கும் என்பதைப் பார்ப்போம்.

## முதலாவதாக கர்த்தருக்குப் பயந்தவர்களுக்கு நன்மை: சங்கீதம் 3:19

உமக்குப் பயந்தவர்களுக்கு நீர் உண்டு பண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது. பெண்களாகிய நாம் இந்த உலகில் கர்த்தருக்குப் பயந்து அனுதினமும் வாழ வேண்டும். அப்படி வாழ்ந்தால் நன்மையைப் பெற்றுக் கொள்ள முடியும். தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம் என்று நீதிமொழிகள் 8:13 கூறுகிறது. உலகில் எங்குச் சென்றாலும், பார்த்தாலும் தீமை நிறைந்து காணப்படுகிறது. நாம் அத்தீமையான காரியங்களில் ஈடுபடாமல் அதை விட்டு விலகி வாழ வேண்டும். அப்படி வாழ்ந்தால் தான் தேவன் நமக்குத் தருகிற நன்மையை சுதந்தரிக்க முடியும். நீதிமொழிகள் 31ல் குணசாலியான ஸ்தீரி பற்றிச் சொல்லும் பொழுது கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள் என்று ஞானி கூறுகிறார். இந்த வசனங்களைப் பார்க்கும் பொழுது கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்குத் தேவன் ஏற்படுத்தியிருக்கிற நன்மை மிகவும் பெரிதாக இருக்கும். இச்செய்தியை தியானிக்கிற நாமும் தீமையை வெறுப்போம், கர்த்தருக்குப் பயந்து வாழ்வோம். தேவன் நமக்குத் தருகிற பெரிதான நன்மையைப் பெற்றுக் கொள்வோம். இந்தப் புதிய வருடம் நமக்கு ஒரு நன்மையான ஆண்டாக, ஆசீர்வாதத்தின் ஆண்டாக தேவன் நமக்கு மாற்றித் தருவார். கர்த்தருக்குப் பயந்து நன்மையைப் பெறுவோம். ஆமென்.

## இரண்டாவதாக கர்த்தரை நம்புகிறவர்களுக்கு நன்மை: சங். 31:19

மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறர்வளுக்கும் நீர் உண்டு பண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது என்று சங்கீதக்காரர் சொல்கிறார். இந்த வசனத்தில் நாம் கர்த்தரை நம்புவோம் அவர் உண்டு பண்ணி வைத்த நன்மையைப் பெறுவோம். எரேமியா சொல்கிறார் கர்த்தரையேத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கற மனுஷன் பாக்கியவான் அதன் விளக்கம் என்னவென்றால் கர்த்தரை மட்டும் தான் நம்ப வேண்டும். அப்படி நம்பினால் நாம் நன்மையைப் பெறுவோம். யோவான் 4:46 முதல் 54 வரை சொல்லப்பட்டுள்ள சம்பவம் ராஜாவின் மனுஷன் தன் மகனுக்காக இயேசுவிடம் வந்தார். அவரைக் கூப்பிட்டார், இயேசு நீ போகலாம் உன் மகன் பிழைத்திருக்கிறான் என்றார். அந்த வார்த்தையை நம்பிப் போனார். அதே நேரத்தில் அவர் மகன் சுகமடைந்தான். ராஜாவின் மனுஷன் இயேசு சொன்ன வார்த்தையை மட்டும் நம்பிப் போனான். அதே நேரத்தில் ஒரு பெரிய நன்மையைப் பெற்றுக் கொண்டார். இதை தியானிக்கிற நாமும் நன்மையைப் பெற்றுக் கொள்ள இயேசுவின் வார்த்தையை அப்படியே நம்பிச் செல்லுவோம். நன்மையைப் பெற்றுக்கொள்வோம். இன்று இயேசுவின் வார்த்தையாகிய வேதவசனத்தை வாசித்து, தியானித்து அப்படியே சொந்தமாக்கி கொள்வோம். நன்மையைப் பெற்றுக் கொள்வோம். பெண்களாகிய நாமும் இந்த வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடந்து, நம் வீட்டிற்குத் தேவையான எல்லா விதமான நன்மைகளையும் நாம் பெற்றுக் கொள்வோம். கர்த்தரை நம்புவோம். நன்மையைப் பெறுவோம் ஆமென்.

## மூன்றாவதாக கர்த்தரை மேய்ப்பராகக் கொண்டால் நன்மை: சங்கீதம் 23:1,6

கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன். என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும், கிருபையும் என்னைத் தொடரும். சங்கீதக்காரர் சொல்கிறார், கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும், கிருபையும் என்னைத் தொடரும். நமக்கு நன்மை கிடைக்க வேண்டுமென்றால் கர்த்தரை மட்டும் மேய்ப்பராக, அதாவது தலைவராக வைக்க வேண்டும். தாவீது ஒரு பெரிய ராஜாவாக இருந்தாலும் ஒவ்வொரு காரியத்தையும் கர்த்தரிடத்தில் கேட்டுத்தான் செய்வார். கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்தருக்கிறேன் (சங்.16:8). தாவீது அப்படி கர்த்தரைத் முன்பாக, தலைவராக வைத்ததினால் ஆடுகள் மேய்த்துக் கொண்டிருந்தவருக்கு ஒரு பெரிய நன்மை கிடைத்தது. சமஸ்த இஸ்ரவேல் ஜனங்களுக்கும் ராஜாவாக உயர்த்தப்பட்டார். தேவன் உண்டு பண்ணி வைத்த நன்மை எவ்வளவு பெரிது. நாமும் நம்முடைய வாழ்க்கையில் எல்லாக் காரியங்களிலும், கர்த்தரை மட்டும் தலைவராக, மேய்ப்பராக வைத்துக் கொள்வோம். அப்போது கர்த்தர் நமக்கு ஏராளமான நன்மைகளைத் தருவார். ஆமென்.

இச்செய்தியில் கூறப்பட்டுள்ள நன்மையை நாம் பெற்றுக் கொள்வோம். கர்த்தருக்குப் பயந்து வாழ்ந்து நன்மையைப் பெற்றுக் கொள்வோம். கர்த்தரை நம்புவோம், நம்பி வாழ்ந்து நமக்குத் தேவன் கொடுக்கும் நன்மையைப் பெற்றுக் கொள்வோம். இந்த வருஷத்தை நன்மையாய் முடிசூட்டி நமக்கு நன்மையைக் கொடுத்து ஆசீர்வதித்து வழிநடத்துவாராக ஆமென். அல்லேலுயா

**எழுப்புதல் ஜெப ஐக்கியம்,** சுரண்டை.

# வேதாகமம் கூறும் கடைசிக்கால சம்பவங்கள்

## எபேசு சபையின் நிலை. வெளி.2:1-7

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, பத்மு என்ற தீவில், திவ்ய வாசகனாகிய யோவானுக்கு ஆவியானவர் வெளிப்படுத்திய விசேஷத்தில் ஆசியாவில் இருக்கிற ஏழு சபைகளுக்கும் வெளிப்பாடு கொடுக்கிறார். அதில் எபேசு சபையின் நிலைப்பற்றி இச்செய்தியில் தியானிப்போம். இச்சபையின் நிலை எப்படி இருக்கிறதென்றால், உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக் கூடாமலிருக்கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள், தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து, அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும்; நீ சகித்துக் கொண்டிருக்கிறதையும், பொறுமையாயிருக்கிறதையும், என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன் (வெளி.2:1-3). இவ்விதமாக எபேசு சபையின் நிலை காணப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில் இச்சபை காணப்படுவதை யார் கண்டாலும், இது பெரிய சபை என்றும், இச்சபையில் பொறுமை, சகிப்புத்தன்மை, சோதித்துப் பார்த்து உண்மையான அப்போஸ்தலர்களைக் கண்டறியும் தன்மை இச்சபைக்கு இருப்பதையும் காண முடிகின்றது. மேலும், இடைவிடாமல் பிரயாசப்படுவோர் இச்சபையில் உண்டு என்பதையும் நாம் காணமுடிகின்றது. இவைகளை நாம் பார்க்கும் போது, இச்சபைக்கு ஒரு குறைவும் இல்லை என்றும், இப்படிப்பட்ட சபை எழும்ப வேண்டும் என்றும் எண்ணம் கொள்வோம். தோற்றத்தின்படி தீர்ப்பு சொல்கிறவர்களாக நாம் இருக்கக்கூடாது. பொதுவாக நாம் இச்சபையின் நிலையை காணும்போது இது மிக நல்ல சபை என்று தான் கூறுவோம்.

ஆனால் ஆவியானவர் இச்சபையைக் குறித்து வேறுவிதமாய் கூறுகின்றார். நல்ல சபை என்று மனிதன் கூறும் இச்சபையில் கூட உள்ளான நிலை வேறுவிதமாய் இருக்கின்றது. ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு என்று (வெளி.2:4) ஆவியானவர் கூறுகின்றார். இவ்வளவு நல்ல கிரியைகள் எபேசு சபையில் காணப்பட்டாலும், ஆதியில் காணப்பட்ட அன்பு இல்லை என்று ஆவியானவர் கூறுவதைப் பார்க்கும் போது, மனிதர்கள் பார்வையில் நிறைவாக இருந்தாலும், ஆவியானவர் பார்வையில் வேறுவிதமாய் இருப்பதை நாம் காண வேண்டிய நிலையில் உள்ளோம்.

இக்கடைசிக் காலத்தில் மனிதனின் கணிப்பை நாம் நம்பாமல், ஆவியானவர் சபைக்கு என்ன கூறுகின்றார் என்பதை நாம் காண விரும்ப வேண்டும். ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக என்ற வசனம் நமக்கும் தேவையாய் இருக்கிறது. ஆவியானவர் இவ்விதம் கூறும்போது அதை ஏற்றுக்கொள்வது நல்லது. ஆண்டவரே, என்னிடம் ஆதி அன்பு இல்லை என்று உணர்ந்து ஜெபிக்கும் போது, நமக்கு உடனே தேவையான கிருபைகள் கிடைக்கும். அவ்விதம் நாம் ஒத்துக்கொள்ளாவிட்டால், நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கி விடுவேன் என்று வெளி.2:4,5 ஆகிய வசனங்களில் வாசிக்கின்றோம். இவ்விதமாய் ஆவியானவர் கூறும்போது, அதற்கு நாம் செவி கொடுக்கும் போது தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற, ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் (வெளி.2:7) என்று வாசிக்கிறோம்.

இச்செய்தியை தியானிக்கும் நாம் மிகவும் கருத்துடையவர்களாகவும், ஜெபிக்கிறவர்களாகவும், வேத வசனத்தை நன்கு தியானித்து அதற்கு கீழ்ப்படிகிறவர்களாகவும் இருக்க அழைக்கப்பட்டுள்ளோம். நாம் செய்த நற்கிரியைகள் யாவும், ஆதியில் கொண்டிருந்த அன்பின் அடிப்படையில் இருக்க வேண்டும். அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம் என்று மத்தேயு 24:12ல் நாம் வாசிக்கின்றோம். எவ்வளவு ஊழியம் செய்தாலும், எவ்வளவு ஜெபம் செய்தாலும், எவ்வளவு தூரம் ஊழியத்திற்குக் கொடுத்தாலும், அளவில்லாமல் தேவ அன்பின் ஏவுதலால் அவைகளை செய்ய வேண்டும். இந்த அன்பு இன்னும் எப்படியெல்லாம் உண்டாயிருக்குமென்றால் ரோமர் 5:5ன்படி பரிசுத்த ஆவி நம்முடைய இருதயங்களில் ஊற்றப்படவேண்டும். தேவகிருபையில் எனது ஆரம்ப இரட்சிப்பின் நாட்களில் தேவ அன்பு ஊற்றப்பட்டபடியால், இன்னும் அந்த அன்பு என்னை நடத்துவதை உணரமுடிகின்றது. எங்கேயாவது இயேசுவின் அன்பு எனக்கு குறைவுபடும்போது, உடனே ஆவிக்குள்ளாக மாற கர்த்தர் உதவி செய்கிறார். இன்னும் கவனமாய் இருக்கவும், ஆவியானவர் நம்மை எச்சரித்து நடத்துகின்றார். தேவ ஊழியர்களும், விசுவாசிகளுமாய் இருக்கும் நாம் ஆதி அன்பை விட்டு விடாதபடி நம்மை நாம் காத்துக் கொள்வோம். இன்னும் கூடுதல் கிருபைகளை கர்த்தர் நமக்கு கட்டளையிடுவாராக ஆமென்.

குறிப்பு : இப்பத்திரிக்கையில் எழுதப்படும் அனைத்து வசனங்களும் ஆவியானவர் நமக்கு அருளும் ஈவாகும். கூடுதல் விவரங்கள் தேவைப்படும்போது ஐக்கியத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். ஆமென்.

**எழுப்புதல் ஜெப ஐக்கியம்,** சுரண்டை.

## 34-வது குடும்பத் தியான முகாம்

இடம் : ஜெப ஐக்கிய ஜெபக்கூடாரம், சுரண்டை
நாள் : **2024, ஜனவரி மாதம் 15,16,17**
**திங்கள், செவ்வாய், புதன்**

தேவ செய்தி :

**Bro. T.சாம் அற்புதராஜ்**
**Bro. P.D.ஞானப்பிரகாசம்**
**Sis. சகுந்தலா, Sis. எப்சிபா**
**மற்றும் ஐக்கிய ஊழியர்கள்**

குடும்பமாய் ஜெபத்துடன் பங்கு பெறுங்கள்.

இம்மாதத்தில் வழக்கமான ஊழியங்களும், சிறப்பான ஊழியங்களும் உண்டு. கர்த்தர் நடத்த ஜெபியுங்கள்.

### 45வது ஆண்கள் தியான முகாம் :

தேவசித்தமானால் நம் ஐக்கியத்தின் 45வது ஆண்கள் தியான முகாம், வருகின்ற மே மாதம் 2,3,4 வியாழன், வெள்ளி, சனி ஆகிய நாட்களில், சுரண்டையில் உள்ள நமது எழுப்புதல் ஜெப ஐக்கிய ஜெபக்கூடாரத்தில் வைத்து நடைபெற உள்ளது. சகோதரர்கள் ஜெபிக்கவும், முகாமில் கலந்து கொள்ளவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

### குறிப்பு :

1. ஐக்கியத்திற்காய் அதிகம் ஜெபித்து, ஊழியத்தில் பங்கு பெறுங்கள்.
2. பத்திரிக்கையை அநேகருக்கு அறிமுகம் செய்யுங்கள்.
3. உங்கள் செல்போன் எண்ணை ஐக்கியத்திற்குத் தெரிவியுங்கள்.
4. உங்கள் பிரச்சனைகளுக்காக ஜெபிப்போம்
5. உங்கள் ஜெபம் ஐக்கியத்திற்கு தினமும் தேவை.
6. தேவன் உங்களை அழைத்தால் ஐக்கிய ஊழியங்களை உங்கள் பகுதியில் செய்யுங்கள்.
7. இம்மாதம் அனைத்து ஊழியங்களும் அபிஷேகத்துடன் நடைபெறும்.
8. ஐக்கியத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டவர்கள் பிறரையும் இரட்சிப்பிற்குள் வழி நடத்துங்கள்.
9. எழுப்புதல் TV என்ற சேனல் முகவரியில் YOU TUBE ஊழியம் நடைபெற்று வருகின்றது.

**தொடர்புக்கு: 90255 53614, 99429 50132**

## நடப்புச் செய்திகள்.

1. தென்மேற்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று (3-12-2023) புயலாக மாறுகிறது.
2. சட்டீஸ்கர், மபி, ராஜஸ்தான், தெலுங்கானா மாநிலங்களில் பதிவான வாக்குகள் இன்று (3-12-2023) எண்ணப்படுகின்றன. இன்று பிற்பகல் அங்கு யார் ஆட்சி அமைகிறது என்பது தெரிந்துவிடும். மிசோரம் மாநிலத்தில் நாளை வாக்கு எண்ணிக்கை நடக்கிறது.
3. நியூசிலாந்து அணியுடனான முதல் டெஸ்ட் போட்டியில், வங்கதேச அணி 150 ரன் வித்தியாசத்தில் அபாரமாக வென்று அசத்தியது.
4. பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் 342 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் 272 உறுப்பினர்கள் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
5. பாகிஸ்தான் தெஹ்ரிக்-இ-இன்சாப் கட்சி தலைவரும், முன்னாள் பிரதமருமான இம்ரான்கான் (71) பல்வேறு ஊழல் வழக்குகளில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.
6. ஐக்கிய நாடுகள் சபையால் உருவாக்கப்பட்ட உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய அமைப்பின் 46வது கூட்டம் ரோமில் நடந்தது.
7. நியூசிலாந்தின் அக்லாந்தில் சீக்கிய வானொலி தொகுப்பாளர் ஹர்னெக் சிங் என்பவர் காலீஸ்தானியர்களுக்கு எதிராக கருத்து கூறியிருந்தார்.
8. போர்நிறுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து காசா மீதான தாக்குதலை இஸ்ரேல் தீவிரப்படுத்தி உள்ளது. இதனால் பலியான பாலஸ்தீனியர்களின் எண்ணிக்கை 15,200ஐ கடந்து விட்டது.
9. வடகொரியாவை தொடர்ந்து தென்கொரியாவும் முதல் முறையாக ராணுவ உளவு செயற்கை கோளை நேற்று முன்தினம் ஏவியது.
10. மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் முயற்சியின் ஒரு பகுதியாக விலங்குகளுடன் விண்கல ஓடத்தை அனுப்பியுள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது.
11. அமெரிக்கா மற்றும் கனடா நாட்டின் குடியுரிமை பெற்ற காலிஸ்தான் தீவிரவாதியை நியூயார்க்கில் வைத்து, கொலை செய்ய இந்திய அதிகாரியுடன் சேர்ந்து முயற்சி நடத்தாக தெரிகிறது.

## “உங்கள் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாகிறபடியினாலே...” ரோமர் 1:8

## உலகமெங்கும் வேத வசன எழுப்புதல் உண்டாக...

1. I இராஜாக்கள் 18:41 பின்பு எலியா ஆகாபை நோக்கி: நீர் போம், போஜனபானம்பண்ணும். பெருமழையின் இரைச்சல் கேட்கப்படுகிறது என்றான். அனைத்து விசுவாசிகள் வாயில் திருவசனம் காணப்படவும், எலியாவின் நாட்களின் எழுப்புதல் உலகத்தில் உண்டாகவும், தேவன் கிரியை செய்யவும் ஜெபிப்போம்.
2. யோசுவா 14:12 கர்த்தர் என்னோடிருப்பாரானால், கர்த்தர் சொன்னபடி, அவர்களைத் துரத்தி விடுவேன் என்றான். காலேப்பிடம் காணப்பட்ட இந்த விசுவாச வார்த்தை போல் இன்னும் ஏராளமான வார்த்தைகள் உலகமெங்கும் உள்ள ஊழியர்களிடம் எப்போதும் காணப்படவும், இதனால் வசன எழுப்புதல் உண்டாக ஜெபிப்போம்.
3. எஸ்தர் 4:14 நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும். இப்படிப்பட்ட வார்த்தை மொர்தெகாயிடம் இருந்தது போல, உலகமெங்கும் உள்ள விசுவாசிகள் வாயில் காணப்படவும், இந்த வார்த்தை பலமாய் கிரியை செய்யவும், எழுப்புதல் வரவும் ஜெபிப்போம்.
4. ஆதி.15:1 கர்த்தருடைய வார்த்தை ஆபிரகாமுக்குத் தரிசனத்திலே உண்டாகி, அவர்: ஆபிரகாமே, நீ பயப்படாதே, நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார். உலகமெங்கும் உள்ள விசுவாசிகளுக்கு, அவர்களைக் குறித்து தேவன் இப்படியாகப் பேசவும், இதனால் அவர்களின் விசுவாசம் வளர ஜெபிப்போம்.
5. யாத். 14:13 இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காண மாட்டீர்கள். உலகமெங்கும் உள்ள ஊழியர்களுடன் தேவன் இவ்விதமாய் பேசவும், இதனால் ஊழியர்களுக்கு இருக்கின்ற தன் பயம், மாறவும், மன தைரியம் யாவருக்கும் கிடைக்கவும், காரியசித்தி கர்த்தரால் உண்டாகவும் ஜெபிப்போம்.
6. உபாகமம் 32:12 கர்த்தர் ஒருவரே அவனை வழிநடத்தினார்; அந்நிய தேவன் அவரோடே இருந்ததில்லை. உலகமெங்கும் உள்ள தேவனுடைய ஜனத்திற்குள் அந்நிய தேவன் வராமல் இருக்கவும், கர்த்தர் ஒருவரே அவர்களை வழி நடத்தவும். இன்னும் சிறப்பான வழி நடத்துதல் யாவருக்கும் கிடைக்கவும் ஜெபிப்போம்.
7. II சாமுவேல் 7:15 உனக்கு முன்பாக நான் தள்ளிவிட்ட சவுலிடத்திலிருந்து என் கிருபையை விலக்கினது போல, அவனை (தாவீது) விட்டு விலக்க மாட்டேன். உலகமெங்கும் உள்ள ஊழியர்கள் மேல் தேவ கிருபை இன்னும் அபரிதமாய் இறங்கவும், அதற்கு யாவரும் தகுதிப்படவும் ஜெபிப்போம்.
8. II நாளாகமம் 7:1 சாலொமோன் ஜெபம் பண்ணி முடிக்கிறபோது, அக்கினி வானத்திலிருந்து இறங்கி, கர்த்தருடைய மகிமையும், ஆலயத்தை நிரப்பிற்று. உலகமெங்கும் உள்ள பரிசுத்தவான்களின் ஜெபத்திற்கு இப்படியாக பதில் கிடைக்கவும். இதனால் சபைகளிலும், வீடுகளிலும், உயிர்மீட்சி உண்டாக ஜெபிப்போம.
9. யோபு 2:10 தேவன் கையினாலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ? இப்படியாக சத்தியத்தை அறிந்து சத்தியத்திற்கு கீழ்ப்படியும் யோபுபோல உண்மையுள்ளவர்கள் தேசமெங்கும் தீவிரமாய் எழும்பவும் இதனால் ஆண்டவரின் கிரியைகள் இன்னும் பலமாய் வெளிப்பட ஜெபிப்போம்.
10. சங்கீதம் 30:11 என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினீர். உலகமெங்கும் உள்ள ஜனங்களின் கண்ணீர், விசுவாசிகள் மூலம் மாறவும், விசுவாசிகளின் கண்ணீர் தேவனால் துடைக்கப்படவும் ஜெபிப்போம்.
11. நீதிமொழிகள் 25:28 தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம் போலிருக்கிறான். உலகமெங்கும் உள்ள ஊழியர்கள் தங்கள் ஆவியை தேவையுள்ளபோது அடக்கி, சரியாய் பயன்படுத்த ஜெபிப்போம்.
12. பிரசங்கி 5:2 உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக. அனைத்து நாடுகளிலும் உள்ள ஊழியர்களும், விசுவாசிகளும் தங்கள் வாயின் வார்த்தைகளை சுருக்கமாய் பேசப் பழக ஜெபிப்போம்.
13. ஏசாயா 7:8 பின்பு, யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன். இந்த சத்தம் உலகமெங்கும் உள்ள விசுவாசிகள் அனைவருக்கும் கேட்கவும், விசுவாசிகள் தங்களை ஆண்டவருக்கு அர்ப்பணிக்கவும் இப்படிப்பட்ட எழுப்புதல் விரைவில் வர ஜெபிப்போம்.

**எழுப்புதல் ஜெப ஐக்கியம்,** சுரண்டை.

## பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்தும் அபிஷேகம் - 132 (யோவான் 16:8)

**கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,** நாம் அபிஷேகம் பெற்று அதன்படி நடந்து வருகின்றோம். நமக்குள் இருக்கும் இந்த அபிஷேகம் போதும் என்று எண்ணிவிடக்கூடாது. இன்னும் பல மடங்கு, அளவில்லாத ஆவியை நாம் தேவனிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அப்போது நம் ஊழியத்தில் எழுப்புதல் உண்டாகி, திரளான ஆத்துமாக்கள் கர்த்தரண்டை சேர்க்கப்படுவார்கள். இந்த ஆபிஷேகம் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பை குறித்தும் எப்படியெல்லாம் நம்மை கண்டித்து உணர்த்தும் என்று இச்செய்தியில் தியானிப்போம்.

1. **பாவத்தைக் குறித்துக் கண்டித்து உணர்த்தும் அபிஷேகம்: II** சாமுவேல் 12:7

தாவீது அரசாண்டு வந்த நாட்களில் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்தார். இப்பாவத்தைக் குறித்து, நாத்தான் தீர்க்கன், நீயே அந்த மனுஷன் என்று கண்டித்து உணர்த்தும் போது, தாவீது, நாத்தானிடம் வந்து, நான் கர்த்தருக்கு விரோதமாய் பாவம் செய்தேன் என்று மனம் உடைந்து தன் பாவத்தை அறிக்கையிட்டதாய் (IIசாமு.12:13) வேதம் கூறுகின்றது. அதுவரை தாவீது பாவங்களை மூடி மறைத்தாலும், பரிசுத்த ஆவியானவர் வரும் போது, பாவத்தை மூடி மறைக்க முடியவில்லை. 51ம் சங்கீதம் முழுவதும் பாவ அறிக்கை ஜெபமாக மாறக்கூடிய அளவிற்கு பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்தார்.

அன்பானவர்களே, ஏன் நமக்கு பரிசுத்தம் வேண்டும் என்றால், நாம் பாவம் செய்து மூடி மறைத்தது நமக்கு விளங்கும்படிக்கும், இனி அந்த பாவம் நமக்குள் வராமல் இருக்கவும் பாதுகாப்பது அபிஷேகமேயாகும். இக்கடைசிக் காலத்தில் பாவத்திற்கு தண்டனை வரும் முன்னே நாம் மனந்திரும்பி பாவத்தை அறிக்கை செய்து அதை விட்டு விடுவோமானால், நாம் தேவ தண்டனைக்கு நீங்கி வாழலாம்.

2. **நீதியைக் குறித்தும் கண்டித்து உணர்த்தும் அபிஷேகம்: I** இராஜா. 3:25

இராஜா, உயிரோடிருக்கிற பிள்ளையை இரண்டாகப் பிளந்து, பாதியை இவளுக்கும், பாதியை அவளுக்கும் கொடுங்கள் என்றான். இந்த வார்த்தையை கேட்டவுடன் உயிரோடிருக்கிற பிள்ளையின் தாய், தன் பிள்ளைக்காகத் துடித்ததை இராஜா பார்த்து, உயிரோடிருக்கிற பிள்ளையை அந்த தாயிடம் கொடுத்ததை நாம் நன்கு அறிவோம் (I இராஜா. 3:25-27). இப்படிப்பட்ட தீர்ப்பைக் கண்டு சாலொமோனின் இராஜ்யமே ஆச்சரியப்பட்டது. இப்படிப்பட்ட தீர்ப்பைக் கொடுத்தது, நீதியைக் குறித்து கண்டித்து உணர்த்தும் அபிஷேகமேயாகும். இந்நாட்களில் இப்படிப்பட்ட அபிஷேகம் நமக்குள் இருக்குமானால், குடும்பத்தில், நாம் ஊழியம் செய்யும் இடத்தில் மற்றும் வேலை செய்யும் இடத்தில் என்னென்ன பிரச்சனை வந்தாலும், அதை மிக எளிதாய் தீர்த்து வைக்க நமக்குள் இருக்கும் நீதியை தீர்த்து வைக்கும் அபிஷேகம் போதுமானதாகும்.

இந்த அபிஷேகத்தையும் நாம் தேவனிடம் இருந்து நாம் பெற்றுக் கொள்ள வேண்டும், நம் குடும்பத்திலும், ஊழயத்திலும் சிக்கலான பிரச்சனைகள் வரும்போது, நம் சுய ஞானத்தால் அவைகளைத் தீர்க்க முடியாது. சாலொமோன் ஜெபித்தது போல், ஞானத்தை தாரும் தேவனே என்று நாம் ஜெபிக்க வேண்டும். அப்போது தேவன் நமக்கு இரங்கி, எப்படிப்பட்ட பிரச்சனை வந்தாலும் அதை எளிதில் தீர்த்துவிடும் அபிஷேகத்தைத் தந்து, நம்மை அற்புதமாய் வழி நடத்துவார். இன்னும் இந்த ஆவியின் வல்லமைக்காய் அதிகமாய் வேதம் வாசித்து, ஜெபிக்க வேண்டும்.

3. **நியாயத்தீர்ப்பைக் குறித்து கண்டித்து உணர்த்தும் அபிஷேகம்: I** சாமுவேல் 8:11-22

நியாயத்தீர்ப்பைக் கண்டித்து உணர்த்தும் அபிஷேகம் என்னவென்றால், பின்னால் நடக்கக்கூடியது காரியத்தை அதாவது, நாம் செய்யும் தவறுகளுக்கு பின் நாட்களில் வரும் தண்டனைகளை முன்கூட்டியே சுட்டிக்காட்டும் அபிஷேகமே, நியாத்தீர்ப்பைக் குறித்து கண்டித்து உணர்த்தும் அபிஷேகமாகும். இந்த அபிஷேகத்தையும் நாம் உடையவர்களாய் காணப்பட வேண்டும். சாமுவேல் தீர்க்கன் நியாயம் விசாரித்து வந்த நாட்களில் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய ஆளுகையை வெறுத்து, ராஜாக்கள் தங்களை ஆள வேண்டும் என்றார்கள். I சாமுவேல் 8:11-22 வரை உள்ள வசனங்களை வாசிக்கும் போது, ஜனங்களுக்கு என்னென்ன தண்டனை கிடைக்கும் என்று மிகத் தெளிவாய் சாமுவேல் தீர்க்கன் தேவ வெளிப்பாட்டுடன் கூறினார். ஆனால் ஜனங்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்றுக்கொள்வது ஜனங்களுக்கு உரிய காரியமாய் இருந்தாலும், பின்னால் வரக்கூடியக் காரியத்தைக் கூறுவது நியாத்தீர்ப்பைக் குறித்து கண்டித்து உணர்த்தும் அபிஷேகம் நம் அனைவருக்கும் தேவை. சுருக்கமாக கூறினால், இந்த அபிஷேகம் நமக்குள் எப்போதும் இருக்க வேண்டும். அதுவே நம்மை வழிநடத்தும் ஆமென்.

**எழுப்புதல் ஜெப ஐக்கியம்,** சுரண்டை.

Registrar of Newspapers for India, Registration 71982/98, New Delhi

TN/WPP-168/SR/2024-2026
Licenced to Post without prepayment
Posted at Surandai on 27th 28th of every month

Postal Registration Number of R.N.P,KOL /005/2024-2026
Date of Publication : December 26,2023
Date of Posting : December 27,2023 Posted at Surandai

# வேதத்தின் மகத்துவங்களில்... சில...

## "சீடர்களுக்கு இயேசு கொடுத்த போதனைகள்" மாற்கு 3:14,15

இயேசு கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, நாம் அனுதினமும் பரிசுத்த வேதத்தை அதிகமாய் வாசித்து அதில் உள்ள சத்தியங்களை நம்முடைய நடைமுறைக்கு பயன்படுத்த வேண்டும். ஆது மட்டுமல்ல அந்தப் போதனைகள் நமது ஊழியத்திற்கு உதவியாய் இருக்கும். இம்மாதம் நாம் தியானிக்கும் சத்தியம் என்னவென்றால் இயேசு தன்னுடைய சீடர்களுக்கு நடைமுறைக்கும், ஊழியத்திற்கும் போதித்த ஆலோசனைகளை மாற்கு 3:14,15 ஆகிய வசனங்களில் வாசித்து, அதை ஜெபத்தோடு கடைப்பிடிக்க வேண்டியதை நாம் தியானிக்க இருக்கின்றோம். அவர்கள் தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம் பண்ணவும், வியாதிகளை குணமாக்கி, பிசாசுகளை துரத்தும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்ததாக இவ்வசனம் கூறுகின்றது. இதை சீடர்கள் கடைப்பிடித்து, உலகத்தை கலக்கிறவர்கள் என்ற ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டது போல நாம் பெற என்னென்ன செய்ய வேண்டும்.

**1. இயேசுவுடன் இருக்க வேண்டும்:** ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் மிக ஆசீர்வாதமாய் இருக்க வேண்டுமானால், அவர்கள் முதலாவது இயேசுவோடு கூட இருக்க வேண்டும். பேதுருவும், யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு அவர்கள் படிப்பறியாதவர்களென்றும், பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்கள் என்றும் அறிந்து கொண்டார்கள் (அப்.4:13). அன்பானவர்களே, உலக வாழ்க்கையில் இருந்தாலும், இயேசுவோடு இருக்க நாம் பழகிக் கொள்ள வேண்டும். இதற்கு தேவ அழைப்பு நமக்குத் தேவை. தேவன் நம்மை அழைத்திருக்கிறார். என்னை தேவன் அழைக்கவில்லை என்று யாரும் கூற முடியாது. நீங்கள் இன்று இப்பத்திரிக்கையின் மூலம், வேதத்தின் மூலம் நம்மை அழைக்கிறார் என்று உணர வேண்டும். நம்மைப் பார்த்து, இவர்கள் இயேசுவோடுகூட இருந்தவர்கள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு நம் ஐக்கியம் இயேசுவோடு இருக்க வேண்டும்.

**2. பிரசங்கம் பண்ண வேண்டும்:** இயேசுவோடு இருக்கும் அனுபவம் இன்னும் வளர வேண்டுமானால், இயேசுவைப் பற்றி நாம் என்னென்ன அறிந்திருக்கிறோமோ அதை மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ண வேண்டும். அப்போஸ்தலர்கள் பிரசங்கம் பண்ணும்போது, வசனத்தைக் கேட்டவர்களில் அனேகர் விசுவாசித்தார்கள். அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாய் இருந்தது (அப்.4:4). தேவன் நம்மை பிரசங்கம் பண்ண அழைத்துள்ளார். இதற்கு நம்மை ஆயத்தம் செய்பவர் இயேசுவே. அனுதினமும் நம்மோடு பேசும் தெய்வம், நம் மூலமாக மற்றவர்களுக்காகவும் பேசுவார். பிரசங்கம் செய்வதற்கு அதிகமான நேரம் ஒதுக்கி விடக்கூடாது. அந்த வரத்தை தேவனே நமக்குப் படிப்படியாகத் தருவார். எந்த இடத்தில் எப்படி பேசுவது, எவ்வளவு நேரம் பேசுவது என்ற ஞானத்தை தேவன் தருவார். யாரும் நமக்கு போதிக்க வேண்டியதில்லை. நாம் பெற்றிருக்கும் அபிஷேகமே நமக்கு போதிக்கும். அந்த அபிஷேகம் போதிக்கிறபடி நாம் நடக்க வேண்டும்.

**3. வியாதிகளைப் போக்க வேண்டும்:** வியாதிகள் இந்நாட்களில் அதிகம் பரவி வருகிறது. அவைகளை குணமாக்க வேண்டும். அவைகளைக் கண்டு பயப்படக்கூடாது. என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் என்று யோவான் 14:14ல் நாம் வாசிக்கின்றோம். நம்மில் ஜெபம் இன்னும் அதிகம் காணப்படும்போது, நாம் யாருக்காக ஜெபிக்கிறோமோ அவர்கள் நம் ஜெபத்தின் மூலம் சுகமடைவார்கள்.

**4. பிசாசுகளைத் துரத்த வேண்டும்:** தேவனுடைய ஊழியர்களாகிய நாம் பிசாசுகளைத் துரத்தும் அதிகாரத்தை பெற்றிருக்கிறோம். நமது வீட்டிலும், ஊழியத்திலும், வேலை செய்யும் இடங்களிலும் சில நேரங்களில் பிசாசின் தொல்லைகள் காணப்படும். அதை நாம் துரத்த வேண்டும். சில வகை பிசாசு நம்மை எதிர்க்கும். நாம் உபவாசித்து ஜெபிக்க வேண்டும். இந்த ஜாதிப்பிசாசு ஜெபத்தினாலும், உபவாசத்தினாலும் புறப்பட்டு போய்விடும் (மத்.17:21).

*If undelivered please return to....*

**Bro.P.Duraisingh Gnanapragasam**
14-6-3(34) Ratna Complex, SURANDAI - 627 859.
Tenkasi (Dt), Tamil Nadu, India.
www.revival.org.in
Cell: 90255 53614, 99653 36459, 9942950132
Ph: 04633-290480

To.
Bro/Sis ______________________

______________________

______________________

Pin | | | | | | |

Printed by P.Thanapaul, Published by P.Duraisingh Gnanapragasam owned by P.Duraisingh Gnanapragasam and Printed at Ravi Printers, 10-7-16 Bus-Stand Road, Surandai - 627 859. Tenkasi (Dist) and published at 14-6-3(34), Ratna Complex, Surandai - 627 859. Tenkasi (Dist) Editor P.Duraisingh Gnanapragasam.